முருகப்பெருமான் துணை

**மகான் மெய்கண்டதேவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.04.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞானச்சுடரேற்றி அருளுகின்ற
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும பலமிக்க வள்ளலே
தவராஜனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல் திங்கள்
குறைவிலா இருபானை திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 25 ம் நாள், 07.04.2024, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க மெய்கண்டதேவர் யானும்
3. யானும் உலகநலம்பெற வேண்டி
உரைப்பேன் ஞானிகள் கேட்டிட
ஞானவான்கள் எனும் பலம்
நாடெங்கும் பெருகினால் தானப்பா
4. அப்பனே ஞானயுகமாற்றம்தனை
அகிலம் கண்டடைய நேரும்
தப்பாமல் அரங்கன் அருளுகின்ற
தரும நெறிதனை மக்கள் ஏற்று
5. ஏற்றுமே அகிலம் எங்கிலுமே
இணையிலா தருமசாலை துவக்கி
மாற்றம் தரும் அன்னதானம் செய்து
மண்ணுலகில் பசிபிணியை விரட்டி
6. விரட்டியே நற்குணங்கள் பெருக
வேலவனார் வழிபாடு துவக்கி
திரட்டியே மக்களிடை சன்மார்க்க
தெய்வ நெறிதனை நிரப்பி
7. நிரப்பியே ஞானம் வளர்க்க
நிலமதனில் ஞானவான்கள் பலம்
வரம்பிலா பெருகி உலகமதின்
வரலாற்றை மாற்றும் வண்ணம்

8. வண்ணமுடன் மக்களிடை தெளிவும்
வள்ளல் தன்மையும் மிகுந்திட
எண்ணமெல்லாம் அரங்கன் கலந்திட
எல்லாம் குருவின் செயலென
9. செயலென சரணாகதி கொண்டு
சேவைவழி தொண்டாற்றியே
தயவென பொருளுதவியும் செய்து
தருமவான்களாக பலம் கூடிட
10. கூடிட எங்கும் தருமநிலை பெருகி
குறைவிலா ஞானவான்களின் தலைமை
நாடெங்கிலும் உருவாகிச் சிறந்து
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சியாக
11. ஆகவே மாற்றங்கள் கண்டு
அரங்கமகான் அவதார நோக்கம்
செகம் கண்டு அற்புதம் காணும்
செப்பிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—